**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 7 /2024 வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 02–ம் நாள் வியாழக்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: செல்வம் தந்தை பெயர்: அமரி

---

<u>02.07.2026: 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. எனக்கு சொந்தமான சர்வே எண் 392/2 க்கு அரசிடமிருந்து பட்டா பெற்ற பின்பு வீடு கட்டினேன் என்றால் அதற்கு முன்பாகவே வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்டி 21 வருடம் ஆகின்றது. அதற்கு முன்பாக காலியிடமாக இருந்தது. சர்வே எண் 392/2 க்கு வடபுறம் எனது பெரிய தாத்தாவிற்கு பூர்வீக சொத்தாக இருந்தது என்றால் சரிதான். எனது அப்பா பெயர் அ. அமரி ஆகும்.

2. வழக்கு சொத்தான சர்வே எண் 392/3 ஆதியில் அடைக்ககோன் மகன் சின்னையா என்பவருக்கு 03.04.1969 யில் ஆவண எண் 265/1969 ல் மருதப்பன் அம்பலம் குமாரத்திகள் காவேரி, முத்தம்மாள், அமராவதி ஆகியோர்களால் கிரையம் கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி அடைக்ககோன் மகன் சின்னையா என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. சின்னையாவின் சட்டபூர்வ வாரிசு கார்மேகம் மற்றும் அவர் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பதிவுகள் ஏதும் ஏற்பட்டதா என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. VAO அலுவலகத்தில் மனு தாக்கல் செய்திருந்தேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுகள் ஏதும் தாவாச்சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ளதா என்று நான் பார்க்கவில்லை.

4. தாவாச் சொத்திற்கு வில்லங்கம் எடுத்து பார்க்கவில்லை. தாவாச் சொத்தை பொறுத்து உரிமையாவணங்கள் ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். VAO அலுவலகத்தில் பார்த்த போது தாவா இடம் எங்கள் அனுபவத்தில் பாதையாக இருப்பது தெரிய வந்தது. நான் மேற்கண்ட விவரத்தை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தை பொறுத்தவரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளதா என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. தாவாச் சொத்தைபொறுத்து எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாவாச் சொத்தின் அனுபவத்தில் உள்ளதால் விசாரணை செய்யவில்லை. மேற்படி விவரத்தை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது பிராதில் 4ம் பிரதிவாதி தாவாச் சொத்தின் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் பார்வையிட்டேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி எதிர் வழக்குரையை பார்வையிட்ட பின்பும் சின்னையாவின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சின்னையா வாரிசுகள் தாவா இடத்திற்கே வரவில்லை.

6. எனது பிராதிலும் சின்னையாவின் வாரிசுகளை தரப்பினராக சேர்த்து பிராதை திருத்தவில்லை என்றால் சரிதான். சின்னையா பெயரில் பதிவு செய்யப்பட்ட 03.04.1969 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தை இரத்து செய்வதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிவாரணமும் நான் கோர வில்லை என்றால் சரிதான். மேற்படி பதிவு பத்திரத்தை மாவட்ட பதிவாளரிடம் இரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்து விசாரணைக்கும் சென்றிருந்தேன். மேற்படி மனு நகலை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தற்போது பின்யோசனை செய்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 03.04.1969 ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்னை கட்டுபடுத்தாது என்று எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் தாவாச்சொத்திற்கு பதிவு ஆவணங்கள் இல்லை. அனுபவத்தின் அடிப்படையில் பட்டாக் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் பட்டாக்கோரி மனு தாக்கல் செய்வதற்கு ஆதரவாக மனு நகல் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுவின் சான்று நகல் கோரியுள்ளேன். மேற்கண்ட விவரத்தை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. தாவாச் சொத்தானது எனது மூதாதையர் சொத்து என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் சர்வே எண் 392/2 க்குரிய ஆவணங்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்தான சர்வே எண் 392/3 க்கு எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 392/2 சொத்திற்கு அனுபவத்தின் அடிப்படையில் 27.09.2012 ல் பட்டா பெற்ற போதே சர்வே எண் 392/3 சொத்து எனது அனுபவத்தில் இருந்திருந்தால் மேற்கண்ட தாவாச்சொத்திற்கும் அன்றே பட்டா பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல.

9. தாவாச்சொத்திற்கு பாத்தியப்பட்ட சின்னையாவின் வாரிசுகள் அவசிய தரப்பினர் என்பதால் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கானது அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பதிவு ஆவணத்தின் கையொப்பம் செய்துள்ள முத்தம்மாள் எனது அத்தை கிடையாது. எனது அத்தை பெயர் விசிக் ஆகும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்கண்ட 4 ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்த பதிவு ஆவணத்தை பார்வையிட்டு ஆவணம் பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்கண்ட பதிவு ஆவணத்தை பற்றி 4 ம் பிரதிவாதி மூலம் தெரிந்து கொண்டும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் மேற்கண்ட பதிவு ஆவணத்தை பற்றி தெரியாது என்று எனது குறுக்கு விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. தாவாச் சொத்து இறந்து போன சின்னையாவின் வாரிசு கார்மேகத்திடம் 26.11.2019 ம் தேதியன்று பதிவில்லா கிரையப்பத்திரத்தின் மூலம் தாவாச் சொத்தை 4 ம் பிரதிவாதி பெற்று 4 ம் பிரதிவாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்வதற்காக எந்த உரிமையும், அனுபவமும் இல்லாமல் தாவா வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தானது எனது மூதாதையார் மூலமாக எந்த வகையிலும், எனக்கு அனுபவமோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.